Stadt Zürich
Stadtentwicklung

Stadt Zürich
Stadtentwicklung
**Integrationsförderung**

Stadthaus, Stadthausquai 17
Postadresse: Postfach, 8022 Zürich
Tel. 044 412 37 37
Fax 044 412 37 42
www.stadt-zuerich.ch/integration

*சூரிச், பங்குனி 2017*

# சேர்ந்து கதையுங்கள் - உங்களின் சேர்ந்து கதைப்பதற்குரிய வாய்ப்புக்கள்

*சூரிச் நகரில், சுவிஸ் கடவுச்சீட்டுடனும் கடவுச்சீட்டு இல்லாமலும் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள்.*

சூரிச் நகரில், நீங்கள் அரசியற் கருத்துருவாக்கத்திலும் அரசியற் தீர்மானங்களை நடை-முறைப்படுத்துவதிலும் பங்கு கொள்வதற்குப் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த அரசியல் நடைமுறையில், ஒரு சுறுசுறுப்பான பங்களிப்பதன் மூலம் நீங்கள் சூரிச் நகரைக் கட்டியெழுப்புவதற்கும் ஒரு சிறந்த சேர்ந்து வாழும் தன்மைக்கும் உங்களால் பணியாற்ற முடியும். உங்களின் பங்களிப்பு வரவேற்கப்படுகின்றது.

- ***சேர்ந்து வாழ்வதை மேம்படுத்துவதற்கு உங்களிடம் ஒரு யோசனை இருக்கின்றது.***

  உங்கள் யோசனையைச் செயற்படுத்துவதற்கு பல்வேறு நகர நிலையங்கள், உ+மாக, உங்கள் பிரிவுக் கூட்டிணைப்பு நிலையம் அல்லது சூரிச் நகரின் இணைந்து வாழ்தலை ஊக்குவிக்கும் நிலையம் ஆகியவை ஆலோசிக்கும். விசேடமாகத் தனி நபர்களினாலும் சங்கங்களினாலும் முன்னெடுக்கப்படும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்தலை மேம்படுத்தும் திட்டப் **பணிகளிலீடுபடுவது** வரவேற்கப்படுகின்றது.

- ***நீங்கள் வசிக்கும் பகுதியை வடிவமைப்பதற்குக் குரல் கொடுக்க விரும்புகின்றீர்கள்.***

  தெருக்கள், இடங்கள், கட்டிடங்களைக் கட்டுவதனூடாக நகரம் மாற்றமடைகிறது. நகர் கட்டியெழுப்பப்படும்போது, அப் பகுதியில் வசிக்கும் மக்களின் விருப்பங்களில் சூரிச் நகர் ஆர்வம் காட்டுகிறது. இதனால், சில சந்தர்ப்பங்களில் **பங்களிப்புச் செயல்முறை** என்று சொல்லப்படும் செயல்முறைத்திட்டத்தினூடாக இது செயற்படுத்தப்படுகின்றது. சூரிச் நகர், சம்பந்தப்பட்ட மக்களை இச் செயல்முறைத் திட்டத்தில் பங்கு பெற அழைக்கின்றது.

- ***நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பாடசாலையில் இணைந்து செயற்பட விரும்புகின்றீர்கள்.***

  சூரிச் நகரிலுள்ள பாடசாலைகள் மாணவ மாணவியரின் பெற்றோருடன் சேர்ந்து வேலை செய்கின்றன. நீங்கள் ஒரு பாடசாலைக் குழந்தையின் தாயாராகவோ அல்லது தந்தையாராகவோ இருந்தால், உ+மாக, ஒரு **பெற்றோர் அவையில்** அல்லது பெற்றோர் மன்றில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு பாடசாலையும் இந்த வாய்ப்புக்களைப் பெற்றோருக்கு அறிவிக்கும்.

- ***நீங்கள் வாழும் பகுதியில் சேர்ந்து கதைக்க விரும்புகின்றீர்கள்.***

  சூரிச் நகரில் 25 பிரிவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை இப் பகுதிகளின் தரமான வாழ்வை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபடுகின்றன. ஒரு **பிரிவு மன்றத்தில்** அங்கத்தவராகும் போது, அது, அப் பகுதிக்குரிய கோரிக்கைகளில் நீங்களும் கலந்து கதைக்கச் சிறந்த வாய்ப்பாகலாம். ஆர்வமுள்ள எவரும் ஒரு பகுதி மன்றத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

- ***அரச அதிகாரிகளிடம் வைப்பதற்கு உங்களிடம் ஒரு கோரிக்கை இருக்கின்றது.***

  ஒவ்வொரு மனிதனுக்கும், ஒரு வேண்டுகோளை, ஒரு விண்ணப்பத்தை, ஒரு ஆலோசனையை அல்லது ஒரு ஆட்சேபணையை ஒரு நிர்வாகப் பணிமனையில் தெரிவிப்பதற்கு உரிமை இருக்கின்றது. **மனுக்கொடுத்தல்** என்பது ஒருமுறை. அதற்கு, உங்களின் கோரிக்கைகளை எழுதி, அதில், உங்கள் மனுவை ஆதரிக்கும் மற்றவர்களின் கையெழுத்துக்களையும் சேகரியுங்கள். அதனைத் தொடர்ந்து அந்த மனுவைச் சம்பந்தப்பட்ட பணிமனையில் சமர்ப்பிக்கலாம்.

- ***நீங்கள், உங்களைப்போல் எண்ணங் கொண்டவர்களுடன் சேர்ந்து செயற்பட விரும்புகின்றீர்கள்.***

  பெரும்பாலும், ஒரே விதமான விடயத்தில் ஆர்வங் கொண்ட அல்லது பொழுது போக்கு எண்ணங் கொண்ட மக்கள் ஒரு **சங்கத்தில்,** ஒரு கட்சியில், ஒரு கூட்டுறவு அமைப்பில் அல்லது வேறொரு ஆர்வலர்கள் குழுவில் இணைந்து கொள்கின்றனர். இந்த அமைப்புக்கள், எல்லோரும் இணைந்திருத்தலைப் பராமரிப்பது மட்டுமன்றி அங்கத்தவர்களின் விருப்பங்களையும் பிரதிபலிக்கின்றன. ஒரு சங்கத்தில்**,** ஒரு கட்சியில், ஒரு கூட்டுறவு அமைப்பில் அல்லது வேறொரு ஆர்வலர்கள் குழுவில் உங்களின் சுறுசுறுப்பான அங்கத்துவம் உங்கள் சொந்தக் குரலை மேலும் பலப்படுத்தும்.

- ***ஒருங்கிணைதல் என்னும் விடயத்தில் உங்களிடம் ஒரு கோரிக்கை இருக்கின்றது.***

  நடைமுறையில், உங்களின் கோரிக்கைகளை அல்லது கேள்விகளை அது சம்பந்தப்பட்ட பணிமனையில் நேரடியாகவே வைப்பதற்கு உங்களுக்கு வாய்ப்பிருக்கின்றது. அதுவும், அக் கேள்வி, ஒரு ஒருங்கிணைப்புக் கொள்கை சம்பந்தமானதாக இருந்தால், அதை நீங்கள் சூரிச் நகரின், ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் அமைப்பிடம் முன்வைக்கலாம். இந்த அமைப்பு, சூரிச் நகரின்

வெளி நாட்டவர் ஆலோசனைக் குழுவினருடன் சேர்ந்து, வருடாந்தம் ஒரு **ஒன்று கூடலைப்** புலம் பெயர் அமைப்பின் பிரதிநிதிகளுடனும் சமயப் பொது அமைப்புக்களுடனும் ஏற்பாடு செய்கின்றது. இந்தச் சந்திப்பு நிகழ்ச்சியில் நீங்கள், உங்களின் இணைந்து வாழும் கொள்கை சம்பந்தமான, குறிப்பிட்ட கோரிக்கையைச் சூரிச் நகரின் பிரதிநிதிகளிடம் சமர்ப்பிக்கலாம்.

- ***நீங்கள் வெளிநாட்டவர் ஆலோசனை மையத்தில் இணைந்து செயற்பட விரும்புகின்றீர்கள்.***

  சூரிச் நகரின் வெளிநாட்டவர் ஆலோசனையமைப்பு, இங்கு வாழும் வெளிநாட்டு மக்களின் கோரிக்கைகளையும் தேவைகளையும் நகரசபையிற் தெரியப்படுத்துகின்றது. இந்த **அமைப்பின் அங்கத்தினர்கள்** நகரசபையினால் ஒவ்வொரு முறையும் நான்கு வருடத்திற்கு நியமிக்கப்படுகின்றனர். இதில் பங்குபெறும் ஆலோசகர்கள் சூரிச் நகரில் வாழ்பவர்களாகவும் சுவிஸ் குடியுரிமை அற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

- ***நீங்கள் மக்கள் வாக்கெடுப்புக்களில் கலந்துகொள்ள விரும்புகின்றீர்கள்.***

  நீங்கள் கூட்டாட்சி, மாநிலங்கள் மற்றும் நகராட்சி மட்டங்களில் வாக்களிப்பதற்கும் தேர்வு செய்வதற்கும், **சுவிஸ் குடியுரிமை** பெற்றவராகவும் பதினெட்டு வயது நிரம்பியவராகவும் புரிந்துகொள்ளும் திறனுடையவராகவும் இருக்கவேண்டும். சுவிஸ் குடியுரிமை பெறுவதற்கு நீங்கள் பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இது சம்பந்தமான தகவல்களைச் சூரிச் நகராட்சி மன்றத்தின் குடியுரிமை பெறுவதற்கான பிரிவு தரும்.

**அரசியலில் பங்கு பற்ற எவ்வகையான மொழித்திறன் வேண்டும்.**

அடிப்படையில், அரசியலில் சேர்ந்து கதைப்பதற்கு நீஙகள் உங்கள் மொழியறிவிற் தங்கியிருக்கத் தேவையில்லை. எல்லோருக்குமே அதற்கு உரிமையிருக்கின்றது. ஆனால், **“டொச்” மொழியில் அடிப்படையறிவு இருத்தல்,** அரசியலில் பங்கு பற்றுவதற்குச் சாதகமானது என்பதை அனுபவம் காட்டுகின்றது. சூரிச் நகரின் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும் நிலையம் உங்களுக்குப் **பொருத்தமான “டொச்”** வகுப்பைத் தேடுவதற்கு உதவி செய்யும்.

**உங்களின் ஈடுபாடு விரும்பப்படுகின்றது. இந்த வாய்ப்புக்கள் பற்றிய மேலும் தகவல்கள், தொடர்பு நிலையங்கள், செயல்முறை உதாரணங்களைக் கீழ்க்காணும் இணையத் தளத்தில் காணலாம்.**

www.stadt-zuerich.ch/partizipation